**IN THE COURT OF THE SUBORDINATE JUDGE,**

**METTUPALAYAM**

**DEPOSITION OF WITNESS**

**O.S. 65/2021**

**CNR.No.TNCB19000**

Date.23.06.2025 PW1

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | குள்ளையன் | **வயது** | 64 |
| **த/பெ** | **பத்திரப்ப கவுண்டர்** | **வட்டம்** | மேட்டுப்பாளையம் |
| **விலாசம்** | ராமேகவுண்டன்புதூர் | **மாவட்டம்** | கோவை |
| | | **தொழில்** | |

The witness swearned under oaths Act 1969 on this the day of 23th June 2025

வா.சா.1 மீண்டும் வரவழைக்கப்பட்டு 1, ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

**1-ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

வா.சா.ஆ. 4 பதிவிற்காக மேட்டுப்பாளையம் சார்பதிவாளர் அலுவலகத்தில் 1ம் பிரதிவாதிக்காக நான்தான் தாக்கல் செய்தேன் என்றால் நான் பதிவு செய்யவில்லை. பத்திரத்தை பதிவு செய்யும்போது சார்பதிவாளர் கையெழுத்து என்னுடையதுதானா என்று கேட்டாரா என்றால் லோன் என்று சொல்லி கையெழுத்து கேட்டார்கள் அதனால் கையெழுத்து செய்தேன். வா.சா.ஆ. 4 ல் கண்ட தொகையை நான் பெற்றுக்கொண்டேனா என்று சார்பதிவாளர் கேட்டாரா என்றால் கேட்டார். உடன் அழைத்துச் சென்றவர் எனக்கு காது கேட்காததால் ஆம் என்று சொல்லச் சொன்னார் அதனால் பெற்றுக் கொண்டதாக சொன்னேன். அந்த பத்திரத்தில் சாட்சிகளாக எனது மகனும் கார்த்திக் என்பவரும் கையெழுத்து செய்தார்கள் என்றால் சரிதான்.

நான் தாக்கல் செய்த வழக்கில் எனது மகன் என்னை ஏமாற்றி கையெழுத்து பெற்றுக் கொண்டதாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். அதன் மீது தற்போது வரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் மாவட்ட கண்காணிப்பாளருக்கு புகார் அனுப்பினேன். மேல் நடவடிக்கை எடுத்ததற்கான ஆவணம் தாக்கல்

செய்யவில்லை என்றால் சரிதான். எனது மகன் இந்த வழக்கில் 2ம் பிரதிவாதி என்றால் சரிதான். எனது மகன் தற்போதுவரை என்னுடன் இருக்கிறார் என்றால் இல்லை தற்போதுதான் 2,3 மாதங்களாக இருக்கிறார். இந்த வழக்கில் 3ம் பிரதிவாதி எனது மகள் என்றால் சரிதான். இன்று நீதிமன்றத்திற்கு எனது மகள் வந்திருக்கிறார் என்றால் சரிதான். அவர்தான் இந்த வழக்கை என்னுடன் இருந்து பார்த்துக்கொள்கிறார் என்றால் சரிதான்.

(வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

Sd/- K.Palanivel.

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம்

மேட்டுப்பாளையம்.